**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 03.07.2025**
**OS. No. 117/2017**
**வழக்கு சாட்சி PW.2–வெங்கடசுப்ரமணி , த/பெ.பச்சமுத்து**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதிகள் மொத்தம் 5 நபர்கள் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 4ம் வாதி பூங்கோதை என் தாயார் என்றால் சரிதான். என் தாயார் சாட்சி அளிக்க முடியாததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை வழித்தடத்திற்காக வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் வாதி சீதாராமனுக்கு தாவா 1ம் அயிட்ட சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றும், அதன் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, பொன்னப்பன் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சொத்தின் நான்கு பக்க சக்குபந்தி என்னால் சொல்ல இயலுமா என்றால் இயலாது.

2) என் நிரூபண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் தாவா 1வது அயிட்ட சொத்து பொருத்து என் பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றி இதுநாள் வரை சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான், 1ம் வாதி சீதாராமன் பெயரில் குறிப்பிடுவதற்கு தவறாக குறிப்பிட்டுள்ளோம். 1ம் வாதி சீதாராமன் கிரையம் பெற்ற ஆவணத்திலேயே தடவழி குறித்து குறிப்பிட்டுள்ளதால் தாவா தடவழி அவருக்கு தேவையில்லை என்றால் சரியல்ல.

3) 2ம் வாதி சண்முகம் அவரது சகோதரர் மாணிக்கம் இருவரும் எப்போது பாகபிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த பாகபிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரத்தில் 2ம் வாதி சண்முகத்திற்கும், இறந்துபோன மாணிக்கத்திற்கும் எந்த அயிட்ட

சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், மாணிக்கத்திற்கு ஒதுக்கியது எங்கள் தோட்டத்திற்கு பக்கம் உள்ளது. எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் சொத்து, அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2ம் வாதி சண்முகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் நான்கு எல்லைகள் வடக்கில் சின்னப்பன் வகையறா நிலம் உள்ளது, கிழக்கில் சீதாராமன் நிலம் உள்ளது, மற்ற இரு திசைகள் எனக்கு தெரியாது.

4) நான் பாகபிரிவினை பத்திரத்தை பார்க்காததால் அதில் குறிப்பிட்டுள்ள தடவழி பாத்தியம் குறித்து எனக்கு தெரியாது என்றால் நான் பாத்திரத்தை பார்க்காததால் எனக்கு தெரியவில்லை, ஆனால் தடவழி உள்ளது. அந்த பாகபிரிவினை பத்திரத்தில் தடவழி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதை மறைத்து தாவா 5வது அயிட்ட சொத்து தான் தடவழி என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் வாதி சுப்ரமணி எங்களது பக்கத்து தோட்டக்காரர் ஆவார். என் நிரூபண வாக்குமூலத்தில் 5வது பத்தியில் 3ம் வாதியும், அவரது குடும்பத்தினரும் கடந்த 02.01.2013ம் தேதி எங்களுக்க பாத்தியப்பட்ட சொத்துக்களை ஒரு பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் மூலம் அடைந்து அனுபவித்து வருவதாக நான் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துக்களுக்கு ஒரே பாகபிரிவினை பத்திரம் தான் என்றும், அதை தான் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் அடைந்துள்ளார்கள் என்றும், அந்த பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பாக தடவழி குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) 3வது அயிட்ட சொத்தின் நான்கு பக்க சக்குபந்தி மேற்கே எங்களுடைய நிலம் உள்ளது, தெற்கில் சிங்கமலை வகையறா மற்றும் சீதாராமன் வகையறா நிலம் உள்ளது, கிழக்கு மற்றும் வடக்கில் சண்முகம் அவர்களின் நிலம் உள்ளது. இது தான் தற்போது நிலையில் உள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு இல்லாமல் நான் மாற்றி என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 4வது அயிட்ட சொத்து எங்களுடைய சொத்து என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தரப்பினர்

இல்லை என்றால் சரிதான். 5 வது அயிட்ட சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் நினைவில்லை. அதன் அளவுகள் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால், சுமார் 60 செண்ட் இருக்கும். சின்னபொண்ணு என்பவர் 1ம் பிரதிவாதியின் கணவர் என்றும், மற்ற பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான்.

6) சின்னபொண்ணுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் தடவழி உரிமை கோருகிறோமா என்றால் இல்லை, அது அரசு நிலம் ஆகும். தாவா 5 வது அயிட்ட சொத்து அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அந்த இடத்தில் அரசு மூலம் கருவேல மரம், கிணறு ஆகியவை வைத்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது தவறு என்றும், தாவா 5 வது அயிட்ட சொத்தான ச.எண்.99/3 ல் கண்ட சொத்து 1ம் பிரதிவாதியின் கணவரான சின்னபொண்ணுக்கு டீகாட் பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு அவ்வாறு பட்டா வாங்கிய விவரம் தெரியாது. டீகாட் பட்டா என்பது அனுபவத்தின் மூலம் வழங்கக்கூடிய பட்டா என்றும், அதுவும் அவரது சுய சம்பாத்திய சொத்தாகத்தான கருதப்படும் என்றால் அவ்வாறு இல்லை.

7) பட்டா நிலங்களில் தண்ணீர் தொட்டி அமைத்தால் அது அரசு நிலமாக கருதப்படாது என்றும், பட்டாதாரர் அரசிற்கு எவ்வளவு நிலம் என்று எழுதிக்கொடுத்தால் தான் அது அரசு நிலமாக கருதப்படும் என்றால் சரியல்ல. நாங்கள் அரசு நிலம் என்று சொல்வதால் அரசையும் ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. அரசை தரப்பினராக சேர்த்தால் தாவா 5 வது அயிட்ட சொத்தின் உரிமையாளர் யார் என்ற உண்மை தெரிந்துவிடும் என்பதற்காகத்தான் நாங்கள் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

8) தாவா 5 வது அயிட்ட சொத்தான ச.எண்.99/3 ல் சின்னபொண்ணுவின் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்த 1ம் வாதிக்கு கிரையம் கொடுத்த நபர்களான பொன்னப்பன், ஆறுமுகம், ரத்தினம்மாள், செங்குட்டுவன் ஆகியோர்கள் மீது இதே மாவட்ட உரிமையியல் நீதிமன்றதில் அ.வ.எண்.22/1983 என்ற வழக்கை தமாக்கல்

செய்து அதில் 03.12.1987 ல் சின்னபொண்ணுவிற்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றும், அதை நான் என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கை எதிர்த்து பொன்னப்பன் வகையறா AS.NO.37/1988 என்ற மேல்முறையீட்டு வழக்கை தொடர்ந்து அந்த வழக்கில் சின்னபொண்ணு நிலத்தின் வழியாக செல்லும் தடவழியில் நடந்து செல்வதற்கும், நிலத்தடி நீர் குழாய் பதிப்பதற்கு மட்டும் உரிமை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

9) மேலும் அந்த வழக்கில் வண்டிப்பாதை என்று ஒன்று சின்னபொண்ணு நிலத்தில் இல்லை என்றும், அவ்வாறு இருந்தாலும் அது பட்டாதாரர் சின்னபொண்ணுவிற்கு தான் அந்த வண்டிப்பாதையை பயன்படுத்துவதற்கு உரிமை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பிற்கு எதிராக எவ்வித மேல்முறையீடும் பொன்னப்பன் வகையறா செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் அந்த தடவழியில் தான் வண்டி, வாகனங்கள் எடுத்து செல்கிறோம்.
(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 23.07.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.